1971 ஜூன் 29]

இடம் கிடைத்தாலும் எண்ணிக்கை பெறத் தேவையில்லை என்ற எண்ணத்தோடு படிக்காமலே இருந்து முதல் ஆண்டிலேயே மூன்று, நான்கு முறை தோற்றுவிடுகிருர்கள். மருத்துவக் கல்லூரியில் கிடைத்த அருமையான இடத்தைப் பயன்படுத்தி அவர்கள் படித்து முன்னேற முயற்சிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்ள முடியும்.

புதிய மருத்துவக் கல்லூரிகள்.

*80 வினு திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

1971-72-ம் ஆண்டில் தமிழகத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரிகள் ஏதேனும் துவங்கிட அரசு திட்டமிட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : ஆண்டுதோறும் எத்தனை மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கினலும் கிராமப் புறங்களுக்கு டாக்டர் கள் பற்ருக்குறை இருப்பதால் புதிய புதிய மருத்துவக் கல்லூரி களைத் தோற்றுவித்து அதிலே கிராமப் புறங்களில் கட்டாயம் சேவை செய்பவர்களுக்கு இடம் கொடுக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி மிக விரி வாக ஆராயப்பட்ட ஒன்ருகும். மருத்துக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியில் வருகிற டாக்டர்கள் இப்போதே அரசாங்கத்தின் வேலையை மட்டுந்தான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக் கிருர்கள். கிராமப் பகுதிகளிலே சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களும் பொதுமக்களுக்குப் பணியாற்றும் வகையில் மக்கள் ஒத்துழைப் போடு மருத்துவ மனைகளை ஏற்படுத்தி தமிழக அரசு சர்வீஸ் போல் சில முறைகளை ஏற்படுத்தி மக்களிடமிருந்து குறைந்த அளவு சந்தா பெற்று நல்ல வசதிகளைச் செய்தால் நூற்றுக் கணக்கான டாக்டர்களுக்கு வேலை வாய்ப்புத் தரமுடியும். இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் பயில இருக்கிற மாணவர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர். ஏற்கனவே ஆயிரம் பேர் தேர்வு எழுதியிருக்கிருர்கள். அரசாங்க மருத்துவ மனையில் ஆண்டு ஒன்றுக்கு 100 அல்லது 150 பேரைத்தான் அதிகப்படியாகச் சேர்த்துக் கொள்ள முடியும். தாராளமாக அழைப்பவர்கள் இருந்தால் செல்லுவதற்கு டாக்டர்கள் காத்துக் கொண்டிருக்கும் காலம் இன்றைக்கு வந்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Health, whether he or the Hon. Minister before him, has received any proposal or letter from the Collector of the Dharmapuri district with regard to starting a medical college in that district?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எந்த ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியிருக்கிறார் என்பது தனிக் கேள்விக்குரிய ஒன்றாகும். மருத்துவக் கல்லூரி அமைப்பது என்பது அகில இந்திய அடிப்படை திட்டத்தில் எத்தனை லட்சம் மக்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று கருதுகிறார்களோ அந்த அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகள் இப்போது இந்த மாநிலத்தில் இருக்கின்றன. இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரிகளுக்குச் செய்யப்பட வேண்டிய minimum satisfactory conditions. இன்னும் பெரும் அளவுக்கு செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. பயிற்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டிய திட்டம் இருக்கிறது. எனவே, இந்த இடைக் காலத்திலே புதிய கல்லூரிகளுக்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. மு. சுருளிவேல் : தலைவரவர்களே, இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத் தாள்களில் வேலை வாய்ப்பு உத்தரவாதம் இல்லை என்று சேர்க்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இப்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள், பயிற்சி பெற்ற பிறகு, அவர்கள் தனியாகவே மருத்துவ மனை அமைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்யும் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உள்ளபடியே இப்போது கூட பயிற்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு அரசாங்கத்திலே உடனடியாக அலுவல்கள் தருவதற்கு வாய்ப்புகள் வசதிகள் நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு 100 பேர்களுக்கு டாக்டர் அசிஸ்டென்ட் என்று போட்டு ரூ. 250 சம்பளத்தில் அவர்களை நியமிக்கிற திட்டம் இருக்கிறது. இன்னும் புதிதாக அரசாங்க மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. ரூரல் டிஸ்பென்சரி, யூனியன் டிஸ்பென்சரி இவற்றை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திரும்பத் திரும்ப வேண்டுகோள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ரூ. 33 கோடி செலவாகிறது. உடனடியாக இல்லாவிட்டாலும், ஆண்டுக்கு 10 மருத்துவ மனை என்று எடுக்கிறபோது அங்கே மருத்துவர்கள் போட வேண்டிய நிலைமை ஏற்படும். அரசாங்கத்தின் முயற்சியில் நடைபெறுகிற சிறு தொழில் கடன் தரும் நிறுவனங்கள் மூலம் டாக்டர்கள், தாங்கள் தொழில் நடத்துவதற்காகக் கடன் கேட்டு முன்வருவார்களானால், ஏறத்தாழ அவர்களுக்கு ரூ. 1 லட்சம் வரையில் கட்டடம் கட்டுவதற்கும், 10,000 ரூபாய் வரையில் எக்விப்மெண்ட்ஸ் வாங்குவதற்கும் நிதி தருகிறது. அதற்காக ஒரு விவரமான அறிக்கையின் மூலம் அறிவிக்க இருக்கிறேன். அது விரைவில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, கிராமங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெரும்பாலான இடத்தில் ஒரே மருத்துவர் தான் இருக்கிறார். கிராமங்களில் அதிக நோயாளி

1971 ஜூன் 29]

கள் அந்த மருத்துவ மனைக்கு வருவதால், ஒரு மருத்துவரால் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. இன்னும் அதிகமான மருத்துவரை இந்த பிரைமரி ஹெல்த் சென்டரில் நியமிக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே. இந்தக் கேள்வி தனிக் கேள்வியாக இருந்தாலும், ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஏற்கெனவே ஒரு டாக்டர் கூட இல்லாத நேரத்தில், இப்போது ஒரு டாக்டராவது இருக்கிறார் என்று கருதி திருப்தி அடைய வேண்டும். இன்னும் கொஞ்சம் காலம் கழித்துத்தான் இரண்டாவது டாக்டரைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்.

Discharged Prisoners' Society

* 81 Q. THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any grant is given to the Tamil Nadu State Discharged Prisoners' Society by the Government; and

(*b*) if so the details thereof for the years 1969–70–71?

THE HON THIRU S. MADHAVAN:

(*a*) Yes.

(*b*) 1969-70 Rs. 12,000 (in two instalments.)

1970–71 Rs. 12,000 (in two instalments.)

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், இப்போது அவர்களுக்கு அளிக்கும் கிராண்ட் தொகையை இன்னும் கூடுதலாகக் கொடுக்கவும், இந்த மாதிரி சொசைடி இல்லாத இடங்களில் கூடுதல் சொசைடி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலம் முழுவதும் உள்ள சங்கம் இது. இன்னும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

சிறைக் கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி

* 82 திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறைக் கைதிகளுக்குக் கட்டாய கல்வி அளிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, ஜெயிலில் உள்ளவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல அறிவு வளருமே. ஆகவே, அவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.